# ‘குளுகுளு’ சென்னைக்காக 16 ஆயிரம் மரக்கன்றுகள்

## மெட்ரோ ரயில் நிர்வாகம் ஏற்பாடு

- என்.சரவணன் -

மெட்ரோ ரயில் பாதை பணிக்காக வெட்டப்பட்டு வரும் மரங்களுக்கு பதிலாக, 16 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. இதுவரை 1,600 மரக்கன்றுகள் சென்னை நகரின் பல்வேறு இடங்களில் நடப்பட்டுள்ளன.

வெட்டப்படும் மரங்களுக்கு பதிலாக, மரக்கன்றுகள் நடுவதற்கு, வனத்துறையிடம், 16 ஆயிரம் மரக்கன்றுகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் கேட்டது. முதல் கட்டமாக, 1,600 மரக்கன்றுகளை வனத்துறை வழங்கியுள்ளது.

இவை சென்னை நகரில் உள்ள அரசு நிலங்கள், மாநகராட்சி பள்ளிகள், கல்லூரிகள், கோயம்பேடு பூ மார்க்கெட் உள்ளிட்ட இடங்களில் நடப்பட்டுள்ளன. மீதமுள்ள 13 ஆயிரத்து 600 மரக்கன்றுகளை நடப்பாண்டில் வழங்குவதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து பெயர் வெளியிட விரும்பாத மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி கூறும்போது, ‘ஐகோர்ட் உத்தரவையடுத்து, மெட்ரோ ரயில் பணிக்காக வெட்டப்படும் மரங்களுக்கு பதிலாக, மரக்கன்றுகளை நடும் பணியை தீவிரப்படுத்தியுள்ளோம்.

மரங்களை நடுவதற்கு, சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. மேலும், கொடுங்கையூர் குப்பை வளாகத்தில் மரக்கன்றுகள் நடவும் திட்டமிட்டுள்ளோம்’ என்றார்.

சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்க, 14 ஆயிரத்து 600 கோடி ரூபாய் செலவில், மெட்ரோ ரயில் திட்ட பணிகள் நடக்கின்றன. வண்ணாரப்பேட்டை- விமான நிலையம்; சென்ட்ரல் - பரங்கிமலை இரண்டு வழித்தடங்களில், 45 கி.மீ., தூரத்திற்கு இப்பாதை அமைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக தனியார் மற்றும் அரசு நிலங்கள் கையகப்படுத்தப்படுகிறது. மேலும், மெட்ரோ ரயில் நிலையம் அமையவுள்ள வழித்தடங்களில், ஏராளமான மரங்கள் உள்ளன. இதில், ரயில் நிலைய பணிக்கு இடையூறாக உள்ள, 385 மரங்கள் வெட்டப்பட உள்ளன.ஏற்கனவே, உலக வெப்பமயமாதலால் பசுமை குறைந்து, ஓசோன் படலம் பாதிக்கப்படுகிறது என, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர். மரங்களை வெட்டாமல் பாதுகாக்க வேண்டும் என அறிவுறுத்தி வருகின்றனர்.

இதையடுத்து, ஒரு மரம் வெட்டப்பட்டால், 10 மரக்கன்றுகள் நடப்பட வேண்டும் என, ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. இதையேற்று, மெட்ரோ ரயில் பாதைக்காக வெட்டப்படும் மரங்களுக்கு பதிலாக, புதியதாக மரக்கன்றுகள் நட முடிவு செய்யப்பட்டுள்ளது.